# இயல் - 5

## கண்மணியே கண்ணுறங்கு.

அ) குறுவினா.

1. இப்பாடலில்  குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?

விடை: இப்பாடலில்  குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் பின்வருமாறு.

- சேர நாடு.
- சோழ நாடு.
- பாண்டிய நாடு.

2. நமது வீட்டிற்கு வந்தவரை உபசரிக்கும் முறையாக நாட்டுப்புறப் பாடல் கூறுவது யாது?

விடை: இல்லம்  வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உணவளித்து உபசரிப்பர் என்ற கருத்தை நாட்டுப்புறப் பாடல் மூலம் அறியலாம்.

ஆ) சிறுவினா.

1. தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாரட்டுகிறாள்?

விடை: தாய் தன் குழந்தையைச் சேரநாட்டு முத்தேனே, சோழநாட்டு முக்கனியே, பாண்டிய நாட்டு முத்தமிழே என்றெல்லாம் பாராட்டுகிறாள்.